# NEWSLETTER

**APRIL 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION




## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


## பிரதேச செயலகத்தினருக்கான வாழ்வியல் பயிற்சி



ஆரையம்பதி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் இளைஞர்கள், மாணவர்களுக்காக பணிபுரியும் சேவையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் வாழ்க்கைத் திறன் பயிற்சி பெற்ற அணியினரால் சிறப்பான முறையில் வாழ்வியலும் வழிகாட்டலும் பயிற்சியானது 02.04.2024 அன்று மேற்கொள்ளப்பட்டது. குழுவாக வேலை செய்தல் மற்றும் பிரச்சினைகளை தீர்த்தல் எனும் தலைப்பில் பல்வேறு சிறப்பான செயற்பாடுகளூடாக எமது குழுவினரால் அவர்களுக்கான பயிற்சி செயலமர்வானது முன்னெடுக்கப்பட்டது.

## மனிதநேய நம்பிக்கை நிதியத்தினரின் வருகை

எமது அறக்கட்டளையின் நன்கொடை உறவான மனித நேய நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பாளர்.திருமதி.சாந்தி தலைமையிலான குழுவினர் 27.04.2024 அன்று வருகை தந்ததோடு எமது விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரியையும் பார்வையிட்டு மாணவர்களையும் சந்தித்ததோடு கல்லூரியின் தேவைப்பாடுகள் பற்றியும் எம்முடனான அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.



## துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு



மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் என்னும் திட்டத்தினூடாக பாடசாலை மற்றும் மேலதிக கல்விசார் நடவடிக்கைகளிற்கு அதிக தூரம் செல்லவேண்டியுள்ள வறுமை நிலையில் உள்ள மாணவர்களிற்கு அவர்களின் நிலைமையினை கருத்திற் கொண்டு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் செயற்பாட்டினை மேற்கொள்ளும் முகமாக முதற்கட்டமாக மாணவி செல்வி.சுகிர்தா ரவிச்சந்திரன் அவர்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கப்படும் நிகழ்வானது 17.04.2024 அன்று இடம்பெற்றது. துவிச்சரக்கர வண்டிக்கான நன்கொடை அனுசரணையை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக **நியூசிலாந்து நாட்டில் வசிக்கும் திருமதி.கணேசராணி ரவீந்திரன் அவர்கள்** வழங்கியிருந்தார்.

# Top news

## விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் அகவை தினம்

எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளை நிறுவனமானது 17.04.2019 அன்று ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டதற்கிணங்க 17.04.2024 அன்று தனது ஐந்தாவது ஆண்டு நிறைவினை இனிதே கடக்கின்றது. அதனடிப்படையில் எமது நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையில் எமது திட்ட முகாமையாளர் திரு.சு.ராஜு கபீரியல் அவர்களின் முகாமைத்துவத்தில் சமூக சிந்தனையுள்ள துடிப்புமிக்க இளைஞர்கள் சேவையாளர்களாக இணைந்து மிகவும் திறம்பட செயற்பட்டுக் கொண்டிருக்கும் எமது அறக்கட்டளையின் அகவை தினமானது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் சேவையாளர்கள், விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, மற்றும் அமிர்தா நிறுவனம் உள்ளிட்ட விவேகானந்த குடும்பத்தின் அனைத்து சேவையாளர்களும் இணைந்து மிகவும் எளிமையான முறையில் 17.04.2024 நினைவு கூரப்பட்டது. இந்நினைவு தினத்தில் கடந்து வந்த பாதைகள் மீட்டுப்பார்க்கப்பட்டது. அனைத்திற்கும் ஆதாரமாய் செயற்பாடுகளிற்கு உதவி வழங்கிடும் எமது புலம்பெயர் உறவுகளையும் நாம் நினைவு கூர்ந்தோம்.




சுவாமி விவேகானந்தரின் பூஜைகளைத் தொடர்ந்து எமது அறக்கட்டளையின் ஆரம்பம் பற்றிய நிறைவேற்றுப்பணிப்பாளரின் பதிவுகளைத் தொடர்ந்து எமது திட்டங்கள் மற்றும் சமூக மாற்றத்திற்கான வலுவூட்டலில் எமது பங்களிப்பு தொடர்பான முகாமையாளரின் சிறப்புரையும் இடம்பெற்றதோடு இன்றைய இளைஞர் சமுதாயத்தின் மாற்றத்திற்கான அவசியம் தொடர்பில் எமது கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் அனுபவப்பகிர்வுகள் மூலம் எடுத்துரைக்கப்பட்டது. நிறைவு விழாவின் இறுதி நிகழ்வாக விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஐந்து ஆண்டு பயணத்தின் நினைவாக எமது ஆறு திட்டங்களையும் உள்ளடக்கிய புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டது.



## விழுதுகள்....!





# விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியின் கல்லூரி தினம்





எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் அகவை தினமானது 04.04.2024 அன்று சமூக நலன்புரி அமைப்பு, கல்லூரியின் சேவையாளர்கள், விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, மற்றும் அமிர்தா நிறுவனம் உள்ளிட்ட விவேகானந்த குடும்பத்தின் அனைத்து சேவையாளர்களும் இணைந்து மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டதுடன் தற்போதைய சூழ்நிலையில் காலநிலை பற்றிய ஒரு விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் வண்ணம் கல்லூரி மாணவர்களால் சிறப்பான முறையில் வீதி நாடகம் ஒன்று களுவாஞ்சிக்குடி பொது பேரூந்து தரிப்பு நிலையத்தில் அரங்கேற்றப்பட்டு, கிரான்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள விவேகானந்த பூங்காவில் மரநடுகையும் இடம்பெற்றதோடு எமது கல்லூரியில் அகவை தினமும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு கல்லூரியின் கடந்து வந்த பாதை, மாணவர்களின் முக்கியத்துவம் மற்றும் எதிர்கால திட்டங்கள் பற்றியும் எமது பணிப்பாளரால் மிகவும் சிறப்பான முறையில் எடுத்துரைக்கப்பட்டது.









# விவேகானந்த குடும்பத்தினரின் சித்திரை விழா

விவேகானந்த குடும்பத்தினரின் சித்திரைக் கொண்டாட்டமானது 16.04.2024 அன்று இடம்பெற்றதுடன் சமூக நலன்புரியமைப்பின் சேவையாளர்கள், விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரி, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா நிறுவனம், கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட விவேகானந்த குடும்பத்தின் அனைத்து சேவையாளர்களும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். பாரம்பரிய விளையாட்டுக்களுடன் பல்வேறு செயற்பாடுகளினூடாக சித்தரைப் புத்தாண்டு தினக் கொண்டாட்டமானது மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.






## புத்தாண்டிற்கான ஆடைகள்




எமது திட்டப்பிரதேசமான புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ஜீவானந்தா மகளிர் இல்லம், மயிலம்பாவளி வாழும் கலை நம்பிக்கைக் கிராமம் மற்றும் முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் ஆகிய இல்லங்களில் வசிக்கும் மாணவிகளுக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அவர்களுக்கான புத்தாடைகள் வழங்கும் நிகழ்வு 13.04.2024 அன்று இடம்பெற்றது.

இச்செயற்பாட்டிற்கு நிதி அனுசரணை வழங்கிய எமது அறக்கட்டளை உறவுகளின் விபரம் வருமாறு

- திரு.வாமதேவன் அமர்நீதி – அமெரிக்கா
- திரு.பிரபாகர் – அவுஸ்திரேலியா
- திரு.யோசுநாதன் – இலண்டன்
- திரு.குணரட்ணம் – இலண்டன்
- திரு.திருமதி.விஜயஸ்ரீ விஜயகுமார் – இலண்டன்
- திரு.கோபால் பகீரதன் – கனடா
- திரு.மாவை சிவம் (இணைப்பாளர் கனகசெல்லா அறக்கட்டளை)
    - திரு.சு.உதயகுமார் – சுவிஸ்
    - அருள்வதி – கம்பளை
    - திரு.மிதிலா சிறீஸ்கந்தஜா, மாலினி குபேந்திரன்
    - திரு.பாஸ்கரமூர்த்தி – ஜேர்மன்
    - திரு.பத்மநாதன் மற்றும் திரு.சிவலோகநாதன் – இலண்டன்
    - திரு.யோசுநாதன் – இலண்டன்

**விழிப்புணர்வுச் செயலமர்வுகள்**





பட்டப்படிப்பு ஒன்றை தொடர்வதற்கான வழிகாட்டலையும், அடிப்படைக் கணினி அறிவினையும் வழங்கிடும் 3 மாத கால இலவச பயிற்சிக்கு 20 வறுமைநிலையில் உள்ள ஆர்வமுள்ள மாணவர்களிற்கு புலமைப்பரிசில் மூலம் தொடருதவியினை விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் பயிற்சியினை தொடரவிருக்கின்றது. இதற்கான உதவியை மனித நேய நம்பிக்கை நிதியம் உதவி வருகின்றது. கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் தெரிவுசெய்யபட்ட மாணவர்களிற்கு, மனித நேய நிதியத்தின் உதவியுடனான 3வது தொகுதி மாணவர்களை இணைத்திடுவதற்கான பயிற்சி பற்றிய தெளிவூட்டலும், அதற்கான நேர்முகப்பரீட்சையும் 17.04.2024 அன்று கல்லூரியின் செங்கலடி கிளையில் கல்லூரி பணிப்பாளர், மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் முகாமையாளர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

## பின்தங்கிய கிராம மாணவர்களுக்கான ஆங்கிலப்பயிற்சி



**AU Lanka & Child Fund** இன் நிதி அனுசரணையில் எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் விவேகானந்த சமூதாய அறக்கட்டளையும் இணைந்து வவுணதீவு பிரதேசத்திற்குட்பட்ட கிராம இளைஞர்களின் ஆங்கில மொழி விருத்திக்காக பல கிராமங்களை மையப்படுத்தி 4 இடங்களில் தற்காலிக பயிற்சி நிலையங்களில் ஊடாக 160 மாணவர்களைத் தெரிவு செய்து ஆங்கில பயிற்சிநெறியை கடந்த ஆறு மாத காலமாக வழங்கியிருந்தது. இதில் வெற்றிகரமாகப் பயிற்சியைப் பூர்த்தி செய்த 153 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 18.04.2024 அன்று மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையில், பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நமசிவாயம் அவர்கள் மற்றும் **AU Lanka** நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி திரு.க.கஜன் அவர்கள் அத்தோடு அரச உத்தியோகத்தர்கள், வலயக்கல்வி அதிகாரிகள், கல்லூரி சேவையாளர்கள், நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர். அம்மாணவர்களுக்கான மேலதிக திறன் விருத்தி போட்டிகளும் நடாத்தப்பட்டு அதில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களிற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.



## அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள சாரதா நிலையத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா **இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தினரின்** நிதியுதவியுடன் 18.04.2024 முல்லைத்தீவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் திரு.ஜெயகாந்தன் அவர்கள் கலந்து கொண்டதோடு அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் தலைவர், முகாமையாளர், சேவையாளர்கள் உள்ளிட்ட மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான வகுப்புகள்




எமது பாலர் பாடசாலை ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களுக்கான ஆங்கிலம் மற்றும் கணினிப் பயிற்சிநெறிகளுக்குரிய முதற்கட்ட வகுப்புகள் 09.04.2024 அன்று ஆரம்பிக்கப்பட்டது.



## ஜீவானந்தா இல்லத்திற்கு களவிஜயம்.

எமது திட்டப்பிரதேசமான புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ஜீவானந்தா பெண்கள் இல்லத்திற்கு 09.04.2024 அன்று களவிஜயம் மேற்கொள்ளப்பட்டதோடு மாணவர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்று அவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சியை மேற்கொள்வது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

## சேவையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை

எமது சேவையாளர்களுக்கான ஆளுமை விருத்திப் பயிற்சிப்பட்டறை 06.04.2024 அன்று எமது கல்லூரியில் இடம்பெற்றதோடு பல்வேறு செயற்பாடுகளூடாக மனோபாவம் தொடர்பான வாழ்க்கைத்திறன் பயிற்சியும் இடம்பெற்றது.



## முதலீட்டு ஊக்குவிப்புத்தொகை வழங்கும் நிகழ்வு



எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் அகவை தினத்தை முன்னிட்டு எமது பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தினூடாக எம்மால் அடையாளம் காணப்பட்ட சுயதொழில் முயற்சியாளரான திருமதி.தங்கமலர் கணேசமூர்த்தி அவர்களுக்கான நிகழ்வானது 17.04.2024 அன்று இடம்பெற்றது. அவருக்கான வாழ்வாதார ஊக்குவிப்புத்தொகை வழங்கப்பட்டதோடு அதற்கான ஆவணங்களும் கைச்சாத்திடப்பட்டு வழங்கப்பட்டது. நன்கொடை அனுசரணையை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக **அமெரிக்காவில் வசிக்கும் திரு.வாமதேவன் அமர்நீதி அவர்கள்** வழங்கியிருந்தார்.

## பாடசாலை அதிபருடனான கலந்துரையாடல்



மயிலம்பாவளி/விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சியை நடாத்துவது பற்றியும் அவர்களுக்கான விசேட பிரத்தியேக வகுப்புகள் நடாத்துவது பற்றிய கலந்துரையாடல் 08.04.2024 அன்று இடம்பெற்றது.

## எமது திட்டத்தில் மேலும் ஒருவர்



எமது மாணவர்களைப் பொறுப்பெடுக்கும் திட்டத்தில் மேலும் ஒரு மாணவன் உள்வாங்கப்பட்டதோடு 04.04.2024 அன்று அவருக்கான முதற்கட்டத் தொகையும் வழங்கிவைக்கப்பட்டது.
எமது அறக்கட்டளை உறவும் அவரால் பொறுப்பெடுக்கப்பட்ட மாணவனின் விபரமும் வருமாறு =

- திருமதி.கணேசராணி ரவீந்திரன், நியூசிலாந்து = ஜீவேந்திரன் டனுஷ்

## காலாண்டு அறிக்கை ஒன்றுகூடல்

எமது விவேகானந்த குடும்பத்தினரின் முதலாவது காலாண்டிற்கான அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு 23.04.2024 அன்று இடம்பெற்றதோடு விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி புதுக்குடியிருப்பு மற்றும் கொம்மாதுறை கிளை, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா உள்ளிட்ட அனைத்து சேவையாளர்களும் கலந்துகொண்டதோடு அனைத்து நிறுவனங்களுக்குமான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றுப்பணிப்பாளர் தலைமையிலான கலந்துரையாடலும் இடம்பெற்றது.





## மாணவி ஒருவருக்கான கல்வி உபகரணங்கள்

உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்கான கல்வி உபகரணங்கள் 24.04.2024 அன்று கொம்மாதுறை விவேகானந்த தொழிநுட்பக் கல்லூரியில் வழங்கப்பட்டது.



## வெல்லாவெளி பாடசாலையினருக்கான கோப்புகள்

மட்/பட்/வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலத்தினரின் கோரிக்கைக்கிணங்க அவர்களுக்கான கோப்புகள் 24.04.2024 அன்று எமது நிறைவேற்றுப் பணிப்பாளரால் வழங்கிவைக்கப்பட்டது

## அறநெறி மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகள்

மாவிலங்கத்துறையில் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலை ஒன்றுக்கான அப்பியாசக்கொப்பிகள் 28.04.2024 அன்று வழங்கப்பட்டது. எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. நன்கொடை அனுசரணையை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக **நியூசிலாந்து நாட்டில் வசிக்கும் திருமதி.கணேசராணி ரவீந்திரன் அவர்கள்** வழங்கியிருந்தார்.



### ஜீவானந்தா இல்ல மாணவிகளுக்கான வாழ்வியல் பயிற்சி

எமது திட்டப்பிரதேசமான புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ஜீவானந்தா மகளிர் இல்லத்தில் வசிக்கும் மாணவிகளுக்கான வாழ்வியல் பயிற்சியானது 11.04.2024 அன்று இடம்பெற்றது. குழு ஒற்றுமை தொடர்பான தொனிப்பொருளில் பல்வேறு உற்சாகமூட்டும் செயற்பாடுகளூடாக மாணவிகளுக்கான தெளிவூட்டல் வழங்கப்பட்டதுடன் எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் சேவையாளர்கள் இப்பயிற்சியினை மேற்கொண்டனர்.



## முல்லைத்தீவு கல்லூரிக்கான களவிஜயம்



எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் பணிப்பாளருட்பட்ட சேவையாளர்களால் முல்லைத்தீவு விவேகானந்த தொழிநுட்பக் கல்லூரி மற்றும் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்திற்கான களவிஜயம் 28.04.2024 அன்று மேற்கொள்ளப்பட்டதோடு அங்கு மாணவர்களுக்கான தொழிலுக்கான திறவுகோல் மேற்கொள்ளப்பட்டு வாழ்க்கைத்திறன் பற்றிய தெளிவூட்டலும் வழங்கப்பட்டது.

### பாடசாலையினருடனான கலந்துரையாடல்

கறுவாக்கேணி/தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபருடனான கலந்துரையாடல் 08.04.2024 அன்று இடம்பெற்றது. மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சியை நடாத்துவது பற்றியும் அவர்களுக்கான விசேட பிரத்தியேக வகுப்புகள் நடாத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் சித்திரை மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்





